சுனாமிப் பணிகள் – இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிப் பணிகள் – ஒப்பந்ததாரர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளுதல் –அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட பணிகளைச் செயல்படுத்த வழங்கப்பட்ட தளர்வுபடுத்தப்பட்ட விதிமுறைகளை இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகளிலும் கடைப்பிடித்தல்

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி.3) துறை**

அரசு ஆணை (நிலை) எண்.37 நாள்: 13.4.2009

படிக்கப்பட்டவை:

(1) அரசு ஆணை (நிலை) எண்.186 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் 16.11.2007.
(2) சுனாமித் திட்ட செயலாக்க அலகு திட்ட அலுவலர் கடிதம் எண்.ஆர்சி. 2942/07/RGRP.2 நாள் 28.2.2009.

**ஆணை:**

இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் குடியிருப்புகளில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றி அடிப்படை வசதிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வழிமுறைகளில், ஒப்பந்ததாரர்கள் மூலம் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக, வெளியிடப்பட்டுள்ள தளர்வுபடுத்தப்பட்ட விதிமுறைகளை, இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகளிலும் கடைப்பிடிக்க, தக்க ஆணைகளை வழங்குமாறு இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் சுனாமித் திட்ட செயலாக்க அலகு திட்ட இயக்குநர் செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

2. இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் 18057 வீடுகளைக் கட்டும் பணி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அக்கட்டுமானப் பணிகள் பல நிலைகளில் உள்ளன. இக்குடியிருப்புகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி செய்து தரப்படுகின்றன. இக்குடியிருப்புகளில் அடிப்படை வசதிகள் செய்து தருவதற்காக, மாவட்ட சுனாமி திட்ட செயலாக்க அலகுகளின் மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், பெரும்பாலான பணிகள் கீழ்க்கண்ட காரணங்களுக்காக இன்னும் நிலுவையில் உள்ளன என சுனாமித் திட்ட செயலாக்க அலகு திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(1) தேவையான பொருட்கள் மற்றும் வேலையாட்களைத் திரட்ட இயலாத ஒப்பந்ததாரர்களின் நிலை;
(2) வேலை செய்து கொண்டிருக்கும் போதே பாதியில் வேலையை செய்யாமல் விட்டு விடுவது மற்றும் பல முறை அறிவிப்புக் (Notice) கொடுத்த பிறகும் மீண்டும் வேலையை துவக்காமல் இருப்பது;
(3) போதுமான நிதி வசதி இல்லாத ஒப்பந்ததாரர்கள்;
(4) சில ஒப்பந்ததாரர்கள் பல வேலைகளைக் கைவசம் வைத்துக் கொண்டு, அதனை உடனடியாக அடுத்தடுத்து செய்யாது இருத்தல்.

**3.** சுனாமித் திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தருவதில் தாமதம் ஏற்படுவதால், மேற்கண்ட வீடுகளை பயனாளிகள் வசம் ஒப்படைக்கக் காலதாமதம் ஆகிறது. ஆகவே, இவ்வீடுகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை விரைவில் முடிக்க வேண்டிய அவசியம் உள்ளது. எனவே, சுனாமி மறுவாழ்வு திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படும் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தருவதில் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டிய அவசியம் உள்ளது. இப்பிரச்சினையைப் போக்கவும் காலதாமதத்தைத் தவிர்க்கவும், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் பணிகளைச் செயல்படுத்துவதில் பின்வரும் சிறப்பு வழிமுறைகள் (guidelines) செய்து தரப்பட்டுள்ளன என்று சுனாமித் திட்ட செயலாக்க அலகு திட்ட இயக்குநர் கூறியுள்ளார்.

(i) "ரூ.5 இலட்சம் அல்லது அதற்கும் குறைவாக உள்ள பணிகளுக்கு மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி கோரிய பிறகும், ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள்/பதிற்குறிப்பு பெறப்படாத இனங்களிலும், ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு ஒப்பந்தப்புள்ளித் தொகை மிக அதிக அளவில் இருக்கும் இனங்களிலும், ஒப்பந்தப்புள்ளி மூலம் அனுமதிக்கப்பட்ட பணிகள் இடையிலேயே கைவிடப்பட்ட இனங்களிலும், அத்தகைய பணிகளை கிராம ஊராட்சிகள் தாமே எடுத்துச் செய்ய (departmentally) மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்படைக்க வேண்டும்.

(ii) ரூ.5 இலட்சத்திற்கும் அதிகமாக உள்ள பணிகளைப் பொறுத்தவரை, மூன்று முறை ஒப்பந்தப் புள்ளி கோரி ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள்/பதில் பெறப் படாத இனங்களிலும், ஏற்றுக் கொள்ள முடியாத அளவிற்கு ஒப்பந்தப்புள்ளி மிக அதிக அளவில் உள்ள இனங்களிலும் ஒப்பந்தப்புள்ளி மூலம் அனுமதிக்கப்பட்ட பணிகள் இடையிலேயே கைவிடப்பட்ட இனங்களிலும் மேற்கண்ட பணிகளை கிராம ஊராட்சிகள் திறந்த நிலை ஒப்பந்தப்புள்ளி கோரி நிறைவேற்ற கிராம ஊராட்சிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி அளிக்க வேண்டும்."

**4.** மேற்கண்ட வழிமுறைகள் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகளைச் செயலாக்க மிகவும் உபயோகமானதாக உள்ளதாகவும், இதே போன்ற வழிமுறையை இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ள பணிகளிலும் கடைப்பிடிப்பது, இத்திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிகளுக்கான பணிகள் நன்முறையிலும் விரைவாகவும் முடிக்க முடியும் என்றும் திட்ட இயக்குநர் தன்னுடைய கருத்துருவில் தெரிவித்து, இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிகள் செய்து தரும் பணிகளைச் செய்வதற்கு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் **16.11.2007** நாளிட்ட அரசாணை (நிலை) எண்.**186**–இல் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தினை செயல்படுத்துவதில் பணிகளை விரைந்து செயல்படுத்த வகுக்கப்பட்டுள்ள மேலே குறிப்பிட்ட வழிமுறைகளைப் பின்பற்ற ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

**5.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சுனாமித் திட்ட செயலாக்க அலகு திட்ட இயக்குநரின் செயற்குறிப்பினை ஆய்வு செய்த அரசு, அச்செயற்குறிப்பினை ஏற்று, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகளை ஒப்பந்தத்தாரர்கள் மூலம் செயல்படுத்தும் போது ஏற்படும் சிரமங்களைக் களைய வெளியிடப்பட்ட சிறப்பு வழிகாட்டு நெறிமுறைகளை இராஜீவ்

காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும் பணிகளிலும் கடைப்பிடிக்க அனுமதிக்கலாம் என முடிவு செய்து, பின்வரும் ஆணைகளை வெளியிடுகிறது.

(i) ‘‘ரூ.5 இலட்சம் அல்லது அதற்கும் குறைவாக உள்ள பணிகளுக்கு மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி கோரிய பிறகும், ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள்/பதிற்குறிப்பு பெறப்படாத இனங்களிலும், ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு ஒப்பந்தப்புள்ளித் தொகை மிக அதிக அளவில் இருக்கும் இனங்களிலும், ஒப்பந்தப்புள்ளி மூலம் அனுமதிக்கப்பட்ட பணிகள் இடையிலேயே கைவிடப்பட்ட இனங்களிலும், அத்தகைய பணிகளை கிராம ஊராட்சிகள் தாமே எடுத்துச் செய்ய (departmentally) மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்படைக்க வேண்டும்.

(ii) ரூ.5 இலட்சத்திற்கும் அதிகமாக உள்ள பணிகளைப் பொறுத்தவரை, மூன்று முறை ஒப்பந்தப் புள்ளி கோரி ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள்/பதில் பெறப் படாத இனங்களிலும், ஏற்றுக் கொள்ள முடியாத அளவிற்கு ஒப்பந்தப்புள்ளி மிக அதிக அளவில் உள்ள இனங்களிலும், ஒப்பந்தப்புள்ளி மூலம் அனுமதிக்கப்பட்ட பணிகள் இடையிலேயே கைவிடப்பட்ட இனங்களிலும் மேற்கண்ட பணிகளை கிராம ஊராட்சிகள் திறந்த நிலை ஒப்பந்தப்புள்ளி கோரி நிறைவேற்ற கிராம ஊராட்சிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி அளிக்க வேண்டும்.’’

**6.** இந்த ஆணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.882/FS/P/09 நாள் 25.03.2009–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.